RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s162

OPEN ACCESS

# தருமபுரி திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மையும் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலும்

**கௌ. பெருமாள்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிந்திக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை-600077, தமிழ்நாடு, இந்தியா

# Life Style and Agriculture of Darmapuri and Thiruvanamalai District People

**G. Perumal** [a, *]

[a] Department of Tamil, Sindhi college of Arts & Science, Chennai-600077, Tamil Nadu, India

* Corresponding Author: ammaappaperumal@gmail.com

Received: 12-06-2022
Revised: 25-09-2022
Accepted: 16-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil people trusted nature and led their life happily. They gave importance to agriculture. They worshiped the sun and rain before cultivating in the paddy fields. The [r domestic animals are cows, hens, Goats, Dogs and cats. The pregnant women had a healthy normal delivery. They ate natural food and lived a disease-free life. They worshiped their ancestors. They sang songs to let their baby sleep. Small grains like millet and rye corn were used as staple food. They worshiped cow as their deities. Thus, the articles show how Tamil people have lived their life along with nature.

**Keywords:** Agriculture, Life Style, Worshiped, Deities

## முன்னுரை

தமிழர்கள் இயற்கையை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். சூரியபகவானையும், மழைபகவானையும் வழிபட்டு தானிய விதைகளை நிலத்தில் விதைப்பார்கள். ஆடு, மாடு, கோழி, நாய், பூனை ஆகியவற்றை வீட்டின் விலங்குகளாக வளர்த்து வந்தார்கள். கர்ப்பிணிப்பெண்கள் சுகப்பிரசவம் அடைந்தனர். கூட்டுக்குடும்பம் சிறந்து விளங்கியது. மக்கள் வயிற்றுக்கு இயற்கையான உணவுகளை உண்டு நோயின்றி நல்வாழ்வை மெற்கொண்டார்கள். முதியோர்களைக் கடவுள்களாக மதிக்கப்பட்டனர். குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாடி தூங்க வைத்தனர். மண்ணையும் உணவாக உண்டு வந்தனர். சிறுதானியங்கள் கேழ்வரகு, கம்பு சோளம் ஆகியவை முதன்மை உணவாக பயன்படுத்தி வந்தனர். பொன்னேறு கட்டி மாடுகளை தெய்வமாக வணங்கினர். இப்படி மண்ணோடு இணைந்து வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றன.

## பொன்னேறு கட்டுதல்

தை மாதத்தில் முதல் மழை பெய்த உடனே ஊரில் தண்டுரா போட்டு அனைவரும் இந்த நாள் காலையில் 6 மணிக்கு பொன்னேறு கட்டவேண்டும் என்று பறையடித்து அறிவிப்பார்கள். கூறியபடியே அந்த நாள் காலையில் ஏர்கலப்பை நொகத்தடி ஆகியவை இணைத்து மாடுகளைப் பூட்டி சூரியபகவானையும் மழை பகவானையும் நினைத்து பச்சை அரிசி, வெல்லம், தேங்காய் ஆகியவை

கலந்து இறைவனை வழிபட்டு அவற்றை மாடுகளுக்கு ஊட்டிவிடுவர். பின்பு வழிப்போக்கர்களுக்கும் கொடுத்து மகிழ்வர்.

"பொன்னேறு பூட்டி ஏர் உழுவர். அந்த நாள் மூன்று பகுதியாக 3,2,2 என்ற கணக்கில் இணைப்பு சங்கலி போன்று மொத்தமாக 7 சுற்றுகளை மட்டும் உழுது நிறுத்திவிடுவர். அந்த நிலத்தை அடுத்த நாள்தான் முழுமையாக உழுது முடிப்பார்கள்." "திருவண்ணாமலை மாவட்டத்தில் வலசை என்ற கிராமத்தில் சித்திரை மாதத்திலும் பொன்னேறு கட்டுவதாக தெரிவித்தார் (Gouran, 2020, Age 90, Personal Interview, Pillappatti, Dharmapuri, India)." இப்படி பொன்னேறு கட்டி உழுது பயிரிடுவதால் பொன் போன்று தானியங்கள் விளையும் என்று நம் முன்னோர்கள் நம்பிக்கை கொண்டனர். வாய்மொழியாக கேட்டு அறியப்பட்ட செய்தி (Bhadrachalam, 2020, Age 65, Personal Interview, Thiruvannamalai, India).

## உழவர்

நிலத்தை மிண்டும் உழுவார்கள். மேல்மண்ணு கீழாகவும், கீழ்மண்ணு மேலாகவும் பலமுறை கலந்து அதுவே தரமான உரமாக மாறி நல்ல விளைச்சலைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை கொண்டார்கள். அத்தகைய உழவின் சிறப்பினை பிள்ளை நிலா என்னும் குழந்தைப் பாடலில் தி. தேவிதாசன்,

"காட்டை மேட்டை திருத்திக்
கழனி ஆக்கிப் போட்டுக்
காயாமல் தண்ணிர் பாய்ச்சி
ஓயாமல் நிலத்தைப் பார்த்து
ஏரை பூட்டி ஓட்டிக்
கோரைப் புல்லைப் பிடுங்கி
விதையை தேர்ந்தே எடுத்து
விதையை விதைத்த பின்னே
கண்ணாய்ப் பயிரைக் காக்கவே
எண்ணம் போல் நெல்லும் விளையவே,
விளைந்த நெல்லை அறுத்துக்
களத்தில் போட்டே அடித்துத்
தூற்றிய பின்னே வண்டியில்
ஏற்றிப் போனார் உழவரே"

என்று உழவர்தம் பணிகளை எடுத்துக்காட்டியுள்ளார் (Devidasan, 1998). உழவன் வரவு செலவு கணக்குப் பார்த்தானால் ஒன்றுமே மிஞ்சாது. நாம் உழவுத் தொழிலை மதித்து உழவுக்குக் கைகொடுப்போம் என்று பாடல் புனைந்துள்ளார்.

## தானியம்

கேழ்வரகு (ராகி), சோளம், கம்பு, ஆகிய உணவு தானியங்களின் சக்திவாய்ந்த பெருமையையும், அதனைச் செய்யும் முறையையும், பயன்படுத்தும் விதத்தையும் எடுத்துக்காட்டுகிறார். இதை உண்டால் நோயில்லாமல் வாழலாம் என்பதையும் அழகாகக் காட்டுகிறார். மழலை மொட்டுகளே என்ற சிறுவர் நூலில் துரை மூர்த்தி, இயற்கை உணவின் பெருமையைத் தம் கவிதையில்,

"கம்பு சோளம் கேழ்வரகைக்

கருத்தாய் அரைத்து மாவாக்கி
நம்மூர் மக்கள் களி செய்து
நன்றாய் உண்டு மகிழ்கின்றார்!
கொதித்த நீரில் மாவுதனைக்
கொட்டி வேக வைக்கின்றார்!
அதிலே கொஞ்சம் உப்பிட்டு
அழகாய் உருட்டி எடுக்கின்றார்!
உருட்டி எடுக்கும் அவ்வுருண்டை
உண்ணும் களியாய் உருமாறும்!
விரும்பி நாமும் குழம்புடனே
வேண்டும் மட்டும் உண்கின்றோம்!
இன்றும் சிற்றூர்ப் புறமெல்லாம்
இனிய இந்தக் களியினையே
நன்றாய் தின்று வாழ்கின்றார்
நாமும் தின்று வாழ்வோமே"

இத்தகைய இயற்கை உணவை உண்டால் எந்த வகையான நோயும் வராது என்றும் மனிதர்கள் நீண்டநாள் வாழலாம் என்றும் தம் சிறுவர் பாடலில் புனைந்துள்ளார் (Kathiresan, 2008).

## தைப்பொங்கல்

தைப்பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். மார்கழியும், தையும் இணைந்து மக்களின் மனத்தை மகிழ்ச்சிப் பொங்க வைக்கும் மாதங்களாகும். வயலில் அறுவடை செய்து நெல் குத்திப் புதுப் பொங்கல் வைத்து இயற்கைக்கும் சூரியனுக்கும் படைத்து வழிபடுவார்கள். மாடுகளை அழகுபடுத்தி மஞ்சள் குங்குமம் இட்டு வண்ணவண்ண ஊதுப்பிகளும்(பலூன்) பூமாலைகளும் அணிவித்து தெய்வமாக வணங்குவார்கள். இத்தகைய தைப்பொங்கல் திருநாளை 'தமிழ்த்தாயின் மடியில்' என்ற நூலில்,

"பொங்கலோ பொங்கலென்று
பொங்கினால் இன்பமுண்டு
மங்கலம் தங்குமெங்கும்
மகிழ்ச்சி தரும் பொங்கலிது
மார்கழியின் வாரிசாம்
மாசிக்கு அன்னையாம்
ஏர் உழவன் திருநாளாம்
எல்லோருக்கும் நன்னாளாம்"

என்று, உழவனின் சிறப்பு நாளான 'தை' மாதத்தை நம் தமிழர்கள் கொண்டாடி வருவதையும், வேளாண்மையே நம் முன்னோர்கள் முதன்மைத் தொழிலாகக் கடைப்பிடித்து வந்தார்கள் என்பதையும் கவிஞர் பாடலாக்கியுள்ளார் (Punithan, 1998).

## மரம் வளர்த்தல்

குழந்தை உலகம் என்ற நூலில் கவிஞர், வீட்டுக்கு அழகு என்ற தலைப்பில், வீட்டின் அருகில் மரம் செடிக் கொடிகளை வளர்த்து தோட்டம் போட வேண்டும் தம்பி, என்று சிறுவர்க்கு அறிவுறுத்துகிறார் (Thamizhiraivan, 2001).

“வீட்டைச் சுற்றிலும்

இடமிருக்கின்றது பார்தம்பி - அது

வீணாய்க் கிடக்குது

தோட்டம் போடலாம் வாதம்பி

வீட்டுக் கழகு தோட்டம் வைப்பது

நாட்டுக் கழகு காடு வளர்ப்பது கேள் தம்பி!”

என்று பாடுகிறார் (Thamizhiraivan, 2001). வீட்டினருகில் மரங்களை வளர்த்தால் நல்ல காற்று கிடைக்கும். தோட்டம் அமைத்தால் குளிர்ச்சி உண்டாகும். பூமியில் ஈரப்பதம் இருக்கும். பூமியில் வெடிப்பு ஏற்படாது. மழை பொழிய மரங்கள் அதிகம் வளர்க்க வேண்டும். நோயில்லாமல் வாழவழிவகுக்கும். பறவை விலங்குகள் வாழ வழி வகுக்கும் என்றெல்லாம் குழந்தைப் பாடலில் விளக்கியுள்ளார்.

## பெண்கள் குழந்தையைப் பெற்றெடுத்தல்

முதல் மாதம் உபாதை நீரையும் இரண்டாவது மாதம் மயக்கமும் மூன்றாவது மாதம் மகிழ்ச்சியும் நான்காவது மாதம் தலைவலியும் ஐந்தாவது மாதம் வயிற்றுவலியும் ஆறாவது மாதம் இடுப்பு வலியும் ஏழாவது மாதம் வளையல் ஒலியும் எட்டாவது மாதம் சோர்வும், ஒன்பதாவது மாதம் பயமும் பத்தாவது மாதம் மறுபிறவியும் எடுத்து ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

பெண்கள் கர்ப்பகாலத்தில் வசதியில்லாத ஏழை குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், பொருளாதார நெருக்கடியில் இருப்பவர்கள் ஏதாவது உண்ணவேண்டும் என்று நினைக்கும்போது, வாயில் களிமண்ணை வைத்துக்கொண்டு அதன் சுவையில் மகிழ்வர். கொஞ்சம் வசதி உள்ள கர்ப்பிணிப் பெண்கள் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு ஆகிய மூன்றையும் சுருட்டி வாயில்மென்று எச்சில் துப்புவர். அதில் அவர்களுக்கு ஒரு சுகம். சிலர் புகையிலை வாயில் வைத்து மென்று எச்சில் துப்புவர். மாங்காய் உண்ணுவார்கள். புளிப்பு இருக்கும் காய்களை உண்டனர். வயலில் வேலை செய்துகொண்டு இருக்கும்போது வீட்டிலேயே குழந்தையைப் பெற்றெடுப்பார்கள். குழந்தையைப் பெற்றெடுத்த தாய்க்குக் கீரையும் குச்சிக் கிழங்கும்தான் அப்போதைக்கு உணவாகக் கிடைக்கும். இப்படி பெண்கள் நாட்டுப்புறங்களில் வாழ்ந்துவந்தனர். வாய்வழியாகக் கேட்டு அறியப்பட்ட செய்தி (Yellammal Gouran, 2013, Age 65, Personal Interview, Pillappatti, Dharmapuri, India).

## தாய்மார்கள் வயலில் வேலை செய்தல்

வயல் வேலைக்குப் பெண்கள் செல்லும்போது, தன்னுடைய குழந்தையையும் உடன் அழைத்துச் செல்வார்கள். அருகில் இருக்கும் மரத்தின் கிளையில் ஏனைக்கட்டி அதில் உறங்க வைப்பார்கள். குழந்தை உறங்கி எழுந்தவுடன் அழுகும். தாய் குழந்தையை எடுத்து தாய்ப்பால் கொடுப்பாள். மீண்டும் அந்த ஏனையிலே படுக்கவைத்து தாலாட்டுப் பாடி கிளிகிளிபை அதில் தொங்கவிட்டு வந்து மீண்டும் வயலில் வேலை பார்ப்பார்கள். அந்த குழந்தை கிளிகிளிப்பை ஆட்டி அதன் இனிய ஓசையைக் கேட்டு மகிழ்ந்து சிரித்துக்கொண்டு இருக்கும். காக்கை, குருவிகளின் சத்தத்தைக் கேட்டும் இன்பமடையும். இப்படித்தான் நாட்டுப்புறங்களில் குழந்தைகளை வளர்த்தார்கள். என் தாயிடம் வாய்மொழியாக கேட்டு அறியப்பட்டவை (Yellammal Gouran, 2013, Age 65, Personal Interview, Pillappatti, Dharmapuri, India).

## வேளாண்மைத் தொழிலும் தாலாட்டும்

கானகத்தில் ஒரு தாலாட்டு' என்ற நூலில், ஒரு தாய் குழந்தையை, மரத்தின் கிளையில் யானைக் கட்டி தாலாட்டுப் பாடி தூங்க வைத்துவிட்டு, வயலில் வேலை செய்வதாகவும், குழந்தை பசிக்காக தன் தாயை அழைப்பதாகவும் பாடுகிறார் (Palanivel, 2007).

### குழந்தை

"கழனியிலே எனை மறந்து

களையெடுக்கும் பெத்தவளே

வேதனையில் எனைச்சுமந்து

வீதியிலே போட்டவளே

விட்டத்துல தூக்குக்கட்டி

வெம்பிடவே வைத்தவளே - வயிறு

பத்துதடி கத்துதடி பறந்து வந்து பாலூட்டு" (Palanivel, 2007)

### தாய்

"காத்தோடி கண்ணீரைக்

கரைத்துவிடும் என் மகனே

வயித்தோடு போராடும்

வம்சத்திலே உதித்தவனே

தப்புப் பயிரைப் போல - நாம்

தப்பாகப் பொறந்து விட்டோம்

அம்மா நிலையறிந்து நீ

அந்திவரை பொறுத்துக்கணும்"

தாய்மார்கள் தாலாட்டுப் பாடல்களை வேளாண்மைத் தொழிலோடு தொடர்புபடுத்திருந்தனர் என்பதைக் காட்சிப்படுத்தியுள்ளார் (Palanivel, 2007).

செட்டிநாடு தாலாட்டு என்னும் குழந்தைப் பாடலில், பல கவிஞர் பாடியுள்ள பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியத்தில் தாலாட்டுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு. தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இந்தத் தாலாட்டு மண்ணின் மரபுக்கு ஏற்ப மாறுபடுகிறது. பல பாட்டிமார்களை அணுகி, அவர்கள் சொல்லக் கேட்டு எழுதிச் சேர்த்து, தொகுத்ததுதான் இந்நூல். ஒரு பாடலில்,

"ஆரடித்தார் ஏனழுதாய்

அடித்தாரைச் சொல்லியழு!

கண்ணே என் கண்மணியே!!

மாமன் அடித்தாரோ

மல்லிகைப்பூச் செண்டாலே!

அத்தை அடித்தாளோ

அரளிப்பூச் செண்டாலே!

யாரும் அடிக்கவில்லை

ஐவிரலும் தீண்டவில்லை

தானா அழுகின்றான்

தம்பி துணை வேணுமென்று!"

என்று குழந்தையைத் தூங்கவைக்க தன் உறவுகளைச் சொல்லி தாலாட்டுப் பாடும் வழக்கத்தினைப் பதிவு செய்துள்ளார். இவ்வகையில் நம் முன்னோர் வேளாண்மைத் தொழில் செய்வதற்காக, தாய்மார்கள் குழந்தைகளுக்கு தாலாட்டுப் பாடல்களைப் பாடி தூங்க வைத்துவிட்டு வயலில் வேலை பார்ப்பார்கள் (Palanivel, 2007).

நாட்டுப்புறங்களில் கல்வியறிவற்ற மக்களுக்கு கல்வியறிவு அளிக்கவேண்டும் என்று தன்னார்வ தொண்டர்களை உருவாக்கி தாலாட்டு, விடுகதை, பழமொழி ஆகியவை வாய்மொழிப்பாடல்களாகப் பாடிக் காட்டி அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுவர் (Palanivel, 2007). கிராமங்களில் வேளாண்மைத் தொழில் செய்தாலும் கைநாட்டு இல்லாத மக்களை உருவாக்குவதே அறிவொளி இயக்கத்தின் குறிக்கோளாக இருந்தது. தாய் தந்தை படிக்கவில்லை, குழந்தை நீயாவது படிக்கவேண்டும் என்பதற்காக கீழ்க்காணும் பாடலில்,

"குறிஞ்சி மலைத்தேனே

கொண்டாடும் சந்தனமே

சரிஞ்சிப் படுத்திருக்கும்

செண்பகமே கண்ணுறங்கு

கண்ணுறங்கு ராசாவே

கால்மொளைச்ச பின்னாலே

ஒன்னு ரண்டு கற்றுக்கொள்ள

ஓடவேணும் கண்ணுறங்கு

ஆத்தா கத்துக்கல

அப்பன்கூட படிக்கவில்ல

பூத்த புதுரோசாவே

பொல்லாங்கு தீர்த்துடுடா

உச்சத்த நிலாவே நீ

ஒழுங்கா படிக்கவேணும்

அச்சத்த விட்டுப்புட்டு நீ

ஆளாகி நடக்கவேணும்

நச்சதிரப் பூப்பறிச்சி

நாதசுவரம் மேளம் வச்சி

அட்சரங்கள் கற்றுக்கொள்ள

அனுப்பிடுவேன் கண்ணுறங்கு"

நாட்டுப்புறங்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் மக்களுக்கு, அறிவொளி இயக்கம் 1995 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில், வீடுகளுக்கே சென்று கல்வியறிவு இல்லாத முதியோர்களுக்கும்

குழந்தைகளுக்கும் இதைப்போன்று பாடல்களை இடம்பெறச்செய்து பாடிக்காட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (Palanivel, 2007).

## விவசாயக் குடும்பத்தில் பூனை

குழந்தைகளுக்குப் பூனை மிகவும் பிடித்த உயிரினம். பூனை என்றாலே குழந்தைகளுக்குக் கொண்டாட்டம். அதுவும் குட்டிப் பூனை என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சிதான். அதுமட்டுமல்லாமல் வேளாண்மை தானியப்பொருட்களை எலிகள் கடித்து சேதம் செய்துவிடும். அப்போது வீட்டில் வளர்க்கப்படும் பூனை அந்த எலிகளை விரட்டிச் செல்லும். பூனையைக் குடும்பத்தில் ஒருவராக நினைத்து வளர்த்தனர். இதைக் குழந்தைக் தம் பாடலில்,

“குட்டிப் பூனையோடு நான்

கொஞ்சி விளையாடுவேன்

மெல்லப் பூனை போலவே

மியாவ் மியாவ் என்று கத்துவேன்

இரண்டு பூனை இருப்பதாய்

எலிகள் நினைத்து ஓடுமே!

பூனை இருக்கும் வீட்டிலே

எலிகளுக்குத் திண்டாட்டம்

எங்களுக்கோ கொண்டாட்டம்”

வேளாண்மைப் பொருட்களைக் காப்பதில் பூனைக்கும் பங்கு உள்ளதைப் பாடல் வழி அறிய முடிகிறது (Kathiresan, 2012).

## விவசாயும் ஆடும்

ஆடுகளை வளர்த்தால் குட்டிகளை ஈன்று நமக்கு பெரிய தொகையாகக் கிடைக்க உதவி செய்யும். ஆடுகள் சிறுவர்களிடத்தில் அன்பாக பழகும். அன்பாக பழகிவிட்டால் தன்னுடனேயே சுற்றித்திரியும். நாம் வெளியில் சென்று வந்தால் நம்மைக் கண்டவுடனே மே என்று சத்தமிட்டு நம்மை திசை திருப்பும். வேளாண்மையோடு தொடர்பு இருப்பதால் வீட்டின் விலங்காக விரும்பி வளர்ப்பார்கள். ஆட்டின் சாணங்கள் வேளாண்மைக்கு மிகவும் நல்ல உரத்தைக் கொடுக்கும். இத்தகைய ஆடுகளுடன் சிறுவன் பேசுவதாக தம் பாடலில்,

“ஓ.... வெள்ளாட்டுக் குட்டியே நீ

வெளியில் எங்கே போகிறாய்?

அம்மா அப்பா கூட நான்

அருகில் மேயப் போகிறேன்!”

என்று பாடுகிறார் (Kathiresan, 2012). ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன் ஆடே நீ எங்கே செல்கிறாய் என்று கேட்பதற்கு, நான் அம்மா அப்பாவிடம் மேயப் போகிறேன் என்று அழகாக ஆடு பதில் கூறுவதாகவும், உரையாடுவதாகவும் கவிஞர் பாடல் பாடியுள்ளார்.

## வேளாண்மையும் பசுவும்

நாட்டுப்புறங்களில் பசுமாடுகளை வளர்ப்பார்கள். வேளாண்மையின் முதன்மை இடத்தை பிடித்துள்ளது. குழந்தைகளிடத்தில் அன்பாக பழகும். நாம் உண்டு மீதி உள்ள உணவுப் பொருட்களை வழங்கினால் விரும்பி உண்ணும். மக்கள் வீட்டின் தெய்வமாக வணங்குவார்கள். கன்றுக்குட்டி தன் தாய் பசுவிடம் துள்ளிக் குதித்து விளையாடும். மக்கள் கன்றுக்குட்டிக்கு கொஞ்சமாக பாலை குடிக்கவைத்துவிட்டு அதிகமான பாலை கரந்துவிடுகிறார்கள். கன்றுக்குட்டி இறந்துவிட்டால் அதன் தோலை கன்றுக்குட்டிப்போல உருவமைத்து பசுவிற்கு காட்டி பாலை கரந்துவிடுவர். இத்தகைய பசுவின் தியாகத்தை தம் பாடலில்,

"வெள்ளிரதம் போல வரும்

வெள்ளைப் பசுவே - எங்கள்

வீட்டுக்கு நீ தெய்வமடி

நல்ல பசுவே!

பருத்திக் கொட்டை பிண்ணாக்கையே

உனக்குத் தருகிறோம் - அதைப்

பக்குவமாய் பால் வடிவில்

எனக்குத் தருகிறாய்"

என்று பாடுகிறார் (Kathiresan, 2011). வெள்ளை நிறப்பசு வெள்ளிரதம் போலவும் வீட்டுக்குத் தெய்வமாகவும் கருதப்படுகிறது. கழிவுப் பொருள்களான வைக்கோல், பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு ஆகியவற்றைத் தின்று நமக்கு நல்ல சத்துள்ள பாலைத் தருகிறது என்று பசுவின் சிறப்பினைக் கவிஞர் பாடலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

## கோழி

பெட்டைக்கோழி முட்டையிடும். முட்டைகளை அடைக்காத்து குஞ்சுப் பொரிக்கும். அந்தக் குஞ்சுகளைப் பருந்து, நாய் போன்றவை வரும்போது தன் இறகை விரித்து மறைத்து வைத்துக் கொள்ளும். பெட்டைக் கோழிக்குச் சற்று பெரிய தொப்பை இருக்கும். கோழியினால் அதிக உயரத்திற்குப் பறக்க இயலாது. காரணம் அதன் உடல் அமைப்பும், உடல் எடையுமே ஆகும். சேவல் கொக்கரக்கோ என்று அதிகாலையிலே அனைவரையும் எழுப்பி விட்டு வேலை செய்யத் தூண்டும் என்பதைக் கவிஞர் தம் பாடலில்,

"கொக்கரக்கோ சேவலே

கொண்டைக் காரச் சேவலே

அதிகாலை எழுப்புறே

அருமையான சேவலே!

கூரை விட்டு இறங்கிவா

கொத்தி தின்னும் சேவலே!

தீனி இருக்கு பறந்து வா

தின்னலாமே சேவலே!"

என்று குழந்தை கோழியிடம் அன்பாக பேசுவதுபோல பாடுகிறார் (Kathiresan, 2012).

கவிமணி அவர்கள் கோழியைப் பற்றி ஒரு பாடலில்,

"கோழி! ஓடி வா வா
கொண்டைப் பூவைக் காட்டுவா
காலை கூவி எங்களைக்
கட்டில் விட்டெழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றிக் கொண்ட கோழியே!"

என்று மக்களுக்கு உதவி செய்கின்ற கோழியின் பெருந்தன்மையினைப் புகழ்ந்து பாடல் அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (Kavimani Desigavinayagam Pillai, 1951).

## முடிவுரை

நம் முன்னோர்கள் வேளாண்மையையே முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். குழந்தைகளை இயற்கையுடனும் ஆடு, மாடு, கோழி, நாய், பூனை ஆகியவற்றை வீட்டுத் தோழர்களாக எண்ணியும் விளையாடவிட்டு வளர்த்தார்கள். மண்ணோடு சேர்ந்தும் பிணைந்தும், தாவரங்களின் வேர்களும் இலைகளுமே இயற்கை மருந்தாகக் கொண்டு உண்டு நோயில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார்கள். கர்ப்பிணிப் பெண்கள் சுகப்பிரசவம் மேற்கொண்டனர். வேளாண்மைக்கு வேதிப்பொருள் கலக்காத எருவுகளை பயிர்களுக்குச் செழுத்தினர். குழந்தைகள் மூன்று வயது முதல் ஐந்து வயது வரை தாய்ப்பால் குடித்தனர் இத்தகைய சிறந்த நாட்டுப்புற மக்களின் வாழ்கையை இந்த ஆய்வுக்கட்டுரையின் வழியே அறியமுடிகிறது.

## References

Devidasan, T. (1998) Pillai Nila, Devidasan Veeliyeedu, Puducherry, India.

Kathiresan, Kuzha. (2008) Eli Kaditha Poonai, Ainthinai Pathippagam, Chennai, India.

Kathiresan, Kuzha. (2011) Inikkum Ariviyal, Ainthinai Pathippagam, Chennai, India.

Kathiresan, Kuzha. (2012) Palikuda Velladu, Paalnila Pathippagam, Chennai, India.

Kavimani Desigavinayagam Pillai, (1951) Marum Malaiyum, Paari Nilaiyam, Chennai, India.

Palanivel, T. (2007) Ganakathil Oru Thalattu, Sundarammal Pathippagam, Kadalur, India.

Punithan, R. (1998) Tamil Thayin Madiyil, Vanaviyal Pathippagam, Chennai, India.

Thamizhiraivan, (2001) Kulanthai Ulagam, Poongavanam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License